என்ற ஒன்றைக் கொண்டுவந்ததை உலகமே பாராட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எல்லாத் திட்டங்களும் எதிர்காலச் சந்ததியை இந்தத் தமிழ் மக்கள் மட்டுமல்ல; உலகத்திற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து அப்படிப்பட்ட திட்டங்களை அறிவித்து, இன்னும் நல்ல திட்டங்களை மக்களுக்கு அறிவிக்கக் காத்திருக்கிறார்கள் என்பதை மட்டும் சுட்டிக்காட்டி, இந்த பட்ஜெட்டிலே பஞ்சாமிர்தம், விபூதி, பென்சில், இரப்பர், நாமக்கட்டி போன்றவற்றிற்கு வரி விலக்கு தந்ததற்கு நான் பாராட்டுகளைத் தெரிவித்து, எந்தக் காலத்திலும் இந்தத் திட்டங்கள் மக்களுக்கு உதவாது; வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களை உயர்த்துவதற்கு அவர்களுடைய அத்தியாவசியப் பொருட்களுக்கு நீங்கள் வரி விலக்கு அளிக்காவிட்டால். இந்தச் சமுதாயம் மன்னிக்காது என்று சொல்லி, தந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28–3–2007) புதன்கிழமை, காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

21. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர்) முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

22. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (சேலம்) முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

23. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை) முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

2007 மார்ச் 27]

24. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம்) முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

25. 2005–2006 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

14. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல்–(முதல் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

15. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல்–(இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS